**செய்தி வெளியீடு எண்:608** **நாள் : 02.12.2014**

## தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை

## பத்திரிகைச் செய்தி

தொடக்கக்கல்வி இயக்கத்தின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் 836 உதவித்தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு நிர்வாகப்பயிற்சி அளிக்க அரசால் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து முதல்கட்டமாக சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை சார்ந்த 73 உதவித்தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு சென்னையில் SIEMAT கூட்ட அரங்கில் நிர்வாகப்பயிற்சி தொடங்கப்பட்டது.

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்கள் 32 தலைப்புகள் கொண்ட பிரத்தியோகமாக தயாரிக்கப்பட்ட உதவித்தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கான கையேட்டை வெளியிட்டு விழாப்பேருரையை ஆற்றினார்கள். இதே கூட்டத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் ஆங்கில உச்சரிப்பை சரியான முறையில் பயில வேண்டும் என்பதற்காக Phonetic Methodology யை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள 42 யூனிட்கள் கொண்ட குறுந்தகட்டினை மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் திருமதி. த. சபிதா இ.ஆ.ப., அரசு முதன்மைச்செயலர், பள்ளிக்கல்வி துறை அவர்கள் தலைமைத் தாங்கி உதவி தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் திருமதி. பூஜா குல்கர்ணி இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் வி.சி.இராமேஸ்வர முருகன் , மெட்ரிக் பள்ளி இயக்குநர் திரு.இரா.பிச்சை, மாநிலக் கல்வியியல் ஆசிரியர் மற்றும் பயிற்சி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடக்க கல்வித்துறை இயக்குநர் முனைவர் ரெ.இளங்கோவன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

**தொடக்கக்கல்வி இயக்குநர்**

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**